**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி.

2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06 ஆம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் ஐப்பசித் திங்கள் 20 ம் நாள்

E.A.No.48/2022

in

E.P.No.45/2021

1. சிங்காரவேல் .... 1ம் மனுதாரர்/வாதி / தீர்ப்பாணை பெற்றவர் (இப்பால் இறந்தார்)

2. செந்தில்குமார்
3. சிவனேசன் .... 2, 3 மனுதாரர்கள்/இறந்த 1ம் மனுதாரர்/வாதியின் வாரிசுகள்

**// எதிர் //**

1. மலர்கொடி .... எதிர்மனுதாரர்/பிரதிவாதி/ தீர்ப்பாணை கடனாளி (இப்பால் இறந்தார்)

2. இளமதி
3. தீபா
4. ஆனந்தகணேசன் .... 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/ இறந்த 1ம் எதிர்மனுதாரரின் வாரிசுகள்

இம்மனுவானது என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.பொன்னுலிங்கம், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்களுக்கு தினசரி நாளிதழ் மூலம் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும்,

எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் வருகையில்லாததால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள் வரை நிலுவையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

நிறைவேற்று மனுவில் இறந்த 1ம் மனுதாரர் / வாதிக்கு மனுவில் 2, 3 மனுதாரர்களை வாரிசுகளாக சேர்த்துக் கொண்டு நிறைவேற்று மனுவை மேல் நடத்த அனுமதியளிக்கும்படி உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22 விதி 3 மற்றும் பிரிவு 151-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம் :-**

மனுதாரர் 2 ம் மனுதாரர்/இறந்த வாதியின் வாரிசு ஆவார். மனுதாரரது தகப்பனாராகிய வாதியால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு அசல் வழக்கு தாக்கல் செய்து 24.07.2015 ம் தேதியில் ஏற்பட்ட தீர்ப்பாணையை அனுசரித்து நிறைவேற்று மனு எண்.45/2021 மனுதாரரது தகப்பனாரால் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில் கடந்த 16.06.2021 ம் தேதியில் இறந்து விட்டார்.

இறந்துபோன மனுதாரர் தகப்பனாருக்கு மனுதாரர் தாயார் மீனாட்சி, மனுதாரர் மற்றும் மனுதாரரின் இளைய சகோதரர் சிவனேசன் ஆகியோர் மட்டுமே வாரிசுகள் ஆவார்கள். மேற்படி மனுதாரர் தாயார் மீனாட்சியும் இறந்து விட்டார். மனுவில் 2, 3 மனுதாரர்கள் மட்டுமே இறந்துபோன மனுதாரர் தகப்பனாருக்கு வாரிசுகளாக இருந்து வருகிறார்கள். மனுதாரர்களை தவிர வேறு வாரிசுகள் கிடையாது. ஆகவே இந்த நிறைவேற்று மனுவில் இறந்த 1ம் மனுதாரர் சிங்காரவேல் அவர்களுக்கு இந்த மனுவின் 2, 3 மனுதாரர்களை வாரிசுகளாக சேர்த்துக்கொண்டு நிறைவேற்று மனுவை மேல் நடத்த அனுமதியளித்து உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர்களுக்கு தினசரி நாளிதழ் மூலம் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் வருகையில்லாததால் ஒருதலைப்பட்ச மாக்கப்பட்டுள்ளனர்.

**4) இம்மனுவில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

5) **<u>தீர்வு</u>** :-

**1.** மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வாதம் கேட்கப்பட்டது. மனு மற்றும் இதர தொடர்புடைய ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**2.** நிறைவேற்று மனுவில் டிக்கிரியில் கண்ட சொத்தை வாதி அனுபவிப்பதற்கு இடையூறு செய்வதுடன் வாதிக்கு தாவா சொத்தைப் பொறுத்து தொடர்ந்து தொல்லை கொடுத்து வருவதால் எதிர்மனுதாரருக்கு நோட்டீஸ் அனுப்பி தீர்ப்புக்கு கீழ்படியாமைக்காக அவருக்கு சொந்தமான ஜங்கம பொருட்களை ஜப்தி செய்ய கோரி நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** இம்மனுவினை பரிசீலிக்கும் போது, மனுதாரர் தகப்பனார் கடந்த 16.06.2021 ம் தேதியன்று இறந்துவிட்டதாகவும், மற்றும் மனுதாரர் தாயார் மீனாட்சியும் இறந்து விட்டார் என்றும் மனுவில் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி மனுவில் 2, 3 மனுதாரர்கள் மட்டுமே வாரிசுதாரர்கள் ஆவார்கள். மனுதாரர் மற்றும் 2, 3 மனுதாரர்களை தவிர வேறு வாரிசுகள் யாரும் இல்லை என்று மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளபோதும், மனுவில் கண்டுள்ள நபர்களை வழக்கில் சேர்ப்பதால் வழக்கின் தன்மை மாறாது என்பதாலும், மனுதாரர் தரப்பு வாதத்தை நிரூபிக்கும் விதமாக இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படபோவது

இல்லை என்பதால் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**6) முடிவில்,** இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (06.11.2024) அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**

**இருதரப்பிலும்** : இல்லை

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி.

2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06 ஆம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் ஐப்பசித் திங்கள் 20 ம் நாள்

**E.A.No.48/2022**

**in**

**E.P.No.45/2021**

1. சிங்காரவேல் (இறப்பு) .... 1ம் மனுதாரர்/வாதி / தீர்ப்பாணை பெற்றவர்

2. திரு.செந்தில்குமார், வயது 42, த/பெ.லேட்.சிங்காரவேல், வசிப்பிடம் மெயின் ரோடு, ஓவர்ச்சேரி கிராமம், ஆதிச்சபுரம் அஞ்சல், மன்னார்குடி முன்சிபி மற்றும் தாலுக்கா.

3. திரு.சிவனேசன், வயது 40, த/பெ.லேட்.சிங்காரவேல், வசிப்பிடம் மெயின் ரோடு, ஓவர்ச்சேரி கிராமம், ஆதிச்சபுரம் அஞ்சல், மன்னார்குடி முன்சிபி மற்றும் தாலுக்கா.

.... 2, 3 மனுதாரர்கள்/இறந்த 1ம் மனுதாரர்/வாதியின் வாரிசுகள்

// எதிர்//

1. மலர்கொடி (இறப்பு) ..... எதிர்மனுதாரர்/பிரதிவாதி/ தீர்ப்பாணை கடனாளி

2. திருமதி.இளமதி, வயது 43, க/பெ.சரவணன், த/பெ.ஆலயமணி, வசிப்பிடம் ராயல் சிட்டி, ரயில்வே லயன் அருகில், நீடாமங்கலம் முன்சிபி மற்றும் டவுன்.

3. திருமதி.தீபா, வயது 41, க/பெ.சற்குணம், த/பெ.ஆலயமணி, வசிப்பிடம் பழைய எண்.1/1, புதிய எண்.16, 1வது தெரு, திருவெற்றியூர் ஜோதி நகர், சென்னை - 600019, சென்னை சிட்டி சிவில் கோர்ட் இலாகா.

4. திரு.ஆனந்தகணேசன், வயது 38, த/பெ.லேட்.ஆலயமணி, வசிப்பிடம் மெயின் ரோடு, ஓவர்ச்சேரி கிராமம், ஆதிச்சபுரம் அஞ்சல், மன்னார்குடி முன்சிபி மற்றும் தாலுக்கா.

.... 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/ இறந்த 1ம் எதிர்மனுதாரரின் வாரிசுகள்

நிறைவேற்று மனுவில் இறந்த 1ம் மனுதாரர் / வாதிக்கு மனுவில் 2, 3 மனுதாரர்களை வாரிசுகளாக சேர்த்துக் கொண்டு நிறைவேற்று மனுவை மேல் நடத்த அனுமதியளிக்கும்படி உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22 விதி 3 மற்றும் பிரிவு 151-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 29.03.2022

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 15.07.2022

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனுவானது என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.பொன்னுலிங்கம், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்களுக்கு தினசரி நாளிதழ் மூலம் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் வருகையில்லாததால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள் வரை நிலுவையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. செலவுத்தொகை இல்லை.

2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 06-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.